செ.வெ.எண்:04 நாள்:03.01.2018

**அரியலூர் மாவட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான தீவிர போலியோ சொட்டு மருந்து வழங்குவது தொடர்பான மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சே.தனசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்கைதளுக்கு “ **தீவிர போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம்**” நடத்துதல் தொடர்பாக மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தலைமையில் இன்று (03.01.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் 28.01.2018 மற்றும் 11.03.2018 ஆகிய நாட்களில் இரண்டு தவணைகளாக 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு **போலியோ சொட்டு மருந்து வழங்கும் தீவர போலியோ சொட்டு மருந்து முகாம்** நடைபெறவுள்ளது. இம்முகாமில், 71136 குழந்தைகள் பயன்பெறவுள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க 547 மையங்கள் செயல்படவுள்ளன. நடமாடும் மருத்துவக்குழு மூலமாக பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் முக்கிய பொது இடங்களிலும், மேலும், வெளிமாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து சிமெண்ட் தொழிற்சாலைகளில் பணி நிமித்தமாக இடம் பெயர்ந்து வசிப்பவர்களின் 5 வயதிற்குட்பட்ட 442 குழந்தைகளுக்கும் சிறப்பு மையங்கள் ஏற்படுத்தியும், அதன் மூலமும் அனைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்களில் பொது சுகாதாரத்துறை, அங்கன்வாடி பணியாளர்களுடன் பிற துறை பணியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ரோட்டரி சங்கங்கள் என 2,188 பணியாளர்கள் பணியாற்றவுள்ளனர். இப்பணிகளுக்கு 40 அரசுத்துறை வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

எனவே, அனைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு ஏற்கனவே போலியோ சொட்டு மருந்து கொடுத்து இருந்தாலும், தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் நாட்களான 28.01.2018 மற்றும் 11.03.2018 அன்று தவறாமல் போலியோ சொட்டு மருந்து போட்டு பயன்பெறுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் செல்வராஜ், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் வீ.சி.ஹேமசந்த்காந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) ஜே.சுரேஷ்குமார், வருவாய் கோட்டாட்சியர் (அரியலூர்) மேகனராஜன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், தலைமை மற்றும் வட்டார மருத்துவர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.